விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 31 திங்கள் 16.08.2021 மலர் - 2, இதழ் - 132


# மோடியின் சுதந்திர தின உரையில் சில



விஜயபாரதம்

பாரதத்தின் 75வது சுதந்திர தினத்தில் செங்கோட்டையில் கொடியேற்றி உரையாற்றிய பிரதமர் மோடி, சுதந்திர போராட்டத்தில் பங்கேற்ற தியாகிகளை நினைவு கூர்வோம். நாட்டு பிரிவினை அனைவருக்கும் வேதனை தந்தது. கோவிட் ஒழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு அனைவருக்கும் நாம் நன்றியை தெரிவிப்போம். ஒலிம்பிக் வீரர்களை வாழ்த்துவோம். சப்கா சாத் சப்கா விகாஸ் என்ற முழக்கத்தின்படி நாட்டில் அனைவரது வளர்ச்சியே நமது இலக்கு. இதற்கென பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளோம் என தெரிவித்தார்.

ஏழைகளுக்கு வழங்கப்படும் தரமான அரிசி கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள், குறைந்த விலையில் தரமான மருந்துகள், உஜ்வாலா இலவச எரிவாயு, ஜன் தன் வங்கிக் கணக்கு, மருத்துவ காப்பீடு, சுகாதார வசதிகள் உள்ளிட்ட எண்ணற்ற வசதிகளை பட்டியலிட்டார். பின்தங்கிய 110 மாவட்டங்களில் வளர்ச்சிக்கென தனிக்கவனம். கல்வி, சாலை வசதி, தகவல் தொடர்பு, வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம். கூட்டுறவு இயக்கங்களின் வளர்ச்சிக்கு தனி அமைச்சகம். நாட்டின் வளர்ச்சிக்கு புதிய கல்வி கொள்கை. 2 ஆண்டுகளில் 4.5 கோடி குடும்பங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு. பாரதத்தில் விளையும் விளை பொருட்களை உலகம் முழுவதும் விற்பதற்கு நடவடிக்கை. விவசாயிகளின் வாழ்வில் வளம் பெருக்கும் புதிய விவசாய சட்டங்கள். கோவிட் காலத்தில்கூட தொழில்நுட்பம் பெற்ற வளர்ச்சிகள். கிராமங்களில் இணைய வசதி. காதி கிராம வளர்ச்சிக்கு முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்தார்.

புரட்சிக்கும், புதுமைக்கும் நாம் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். மிகப்பெரிய திட்டம் ஒன்று விரைவில் வர உள்ளது. கப்பல்கள், போர் விமானங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தயாரித்து உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்ய உள்ளோம். இது உலக அளவில் தொழில் வளர்ச்சியை வளர்ப்பதுடன் பாரதத்தை பெருமை பெற செய்யும் என பாரத வளர்ச்சியில் பங்கு பெற தொழிற்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் அழைப்பு விடுத்தார்.



விஜயபாரதம்

# மோகன் பாகவத் கொடியேற்றம்

மஹாராஷ்ட்ராவில் மும்பை தாதரில் உள்ள ராஜா சிவாஜி பள்ளியில் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

# தேசியக்கொடி ஏற்றத் தடை

**செ**ங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஒன்றையும் முருகர் கோவில் பஜார் வீதி அருகில் தேசியக்கொடி ஏற்றுவதற்கு யாரோ ஒரு சிலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என கூறி, கொடியேற்றத் தடை விதித்தார் அச்சரப்பாக்கம் காவல் ஆய்வாளர் இளவரசன். கொடியேற்ற சென்ற இந்து முன்னணியினருக்கு மிரட்டலும் விடுத்து அவர்களை கைது செய்தார். கொடிக் கம்பம் அகற்றப்பட்டது. நாம் சுதந்திரம் அடைந்த பாரதத்தில்தான் இருக்கிறோமா அல்லது முகலாய, ஆங்கிலேய ஆட்சி நடக்கிறதா என்று புரியவில்லை, இது குறித்து எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், காவல் ஆய்வாளர் உட்பட 75வது சுதந்திர தினத்தை கொண்டாட தடை ஏற்படுத்தியவர்கள் அனைவர் மீதும் மத்திய மாநில அரசுகள் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.



விஜயபாரதம்

# கோயிலில் திருட்டு முயற்சி



விஜயபாரதம்

**கோ**வில்பட்டியில் பூமிதேவி நீலாதேவி சமேத ஸ்ரீசுந்தரராஜ பெருமாள் கோவில் உள்ளது. இந்தக் கோயிலில் நள்ளிரவு ஒரு மணிக்கு பாதுகாப்பு அலாரம் ஒலித்தது. இதனால் கோவிலின் இரவுக் காவலர்கள், பொதுமக்கள் கோவில் முன் திரண்டனர். உடனடியாக கோவில் நடையை திறந்து சென்று பார்த்தனர். அப்போது மூலவர் சன்னதியின் இரண்டு கதவுகளின் பூட்டுகளும் உடைக்கப்பட்டதும் பின்புற பிரகாரத்தில் சக்கரத்தாழ்வார் சன்னதிக்கு மேல் கயிறு, கடப்பாரை, ஸ்க்ரூ டிரைவர் ஆகியவை இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. மர்ம நபர்கள் அவ்வழியாக உள்ளே வந்திருக்கலாம், அலாரம் ஒலித்ததால் அதே வழியாக தப்பியிருக்கலாம் என கூறப்படுகிறது. இது குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கிறிஸ்துவ காப்பகத்தில் அத்துமீறல்



விஜயபாரதம்

சென்னையில் 'மெட்ராஸ் கிறிஸ்டியன் கௌன்சில் ஆப் சோஷியல் சர்வீஸ்' என்ற அமைப்பு காப்பகம் ஒன்றை நடத்தி வருகிறது. அந்த காப்பகத்தில் சிறுவர்கள், சிறுமிகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் என 130 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த காப்பகத்தின் நிர்வாக செயலாளர் இசபெல் ரிச்சர்ட்சன். இவர் சென்னை மாவட்ட குழந்தைகள் நலக் குழு உறுப்பினராகவும் உள்ளார். கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் இசபெல் தனது தம்பி பென்னட் ரிச்சர்ட்சன் என்பவரை அந்த விடுதியில் தங்கவைத்துள்ளார். காப்பகத்தில் தங்கிய ரிச்சர்ட்சன், அங்கிருந்த 15 வயது சிறுமி மற்றும் 20 வயது பெண்ணிற்கு பாலியல் தொல்லை அளித்துள்ளார். அந்த சிறுமி காப்பக பொறுப்பாளரிடம் புகார் அளித்துள்ளார். விசாரணையில் பென்னட் பாலியல் தொல்லை தந்தது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து இசபெல் நிர்வாக பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இசபெல்லை காவல்துறையினர் கைது செய்தனர். தலைமறைவான பென்னட்டை தேடி வருகின்றனர்.


# கொடியேற்ற எதிர்ப்பு நீங்கியது

நமது பாரத தேசத்தின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுதும் உள்ள தீவுகளில் மூவர்ணக் கொடியை ஏற்றி கொண்டாட ராணுவ அமைச்சகம் திட்டமிட்டது. எனினும், தெற்கு கோவாவில் உள்ள சாவோ ஜசின்டோ என்ற தீவில் மூவர்ணக் கொடியை ஏற்ற, அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து கொடி ஏற்றும் நிகழ்ச்சியை ரத்து செய்வதாக, இந்திய கடற்படை அறிவித்தது. எனினும் திட்டமிட்டபடி தீவில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சியை நடத்த, கோவா மாநில முதல்வர் பிரமோத்சாவந்த், கடற்படை அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்தார். 'தேசவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, அப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கையும் விடுத்தார். இதையடுத்து, 'தீவில் கொடி ஏற்ற, தாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை' என, அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதனையடுத்து அத்தீவில் கொடியேற்றப்பட்டது.

விஜயபாரதம்



# ஜெய்ஹிந்த் சொல்வோம்



விஜயபாரதம்

வேளாண் பட்ஜெட்டை குறித்து சட்டசபையில் பேசிய பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர்காந்தி, முதன்முறையாகதாக்கல் செய்யப்பட்ட வேளாண் பட்ஜெட்டிற்கும் தி.மு.க அரசு பதவியேற்று 100 நாட்கள் நிறைவு செய்ததற்கும் வாழ்த்து தெரிவித்தார். மேலும், 'இன்று 75வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தையை சொல்லாததற்காக சட்டசபையில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. எனவே, 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் நாம் அனைவரும், 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தையை பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்' என்று பேசினார். சபாநாயகர் அப்பாவு, 'நீங்களே அதனை பதிவு செய்து விட்டீர்கள், நன்றி' என தெரிவித்தார்.

# நூல் வெளியீட்டு விழா



விஜயபாரதம்

திருச்சி மாவட்டம் திருவானைக் காவல் சர்.சி.வி. ராமன் பிறந்த இடத்தில் 75வது சுதந்திரதின விழாவும் மண்ணின் மைந்தன் சர்.சி.வி.ராமன் புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்ட ஆர்.எஸ்.எஸ் தலைவர் சம்பத் தலைமை தாங்கினார். விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் இணை பொதுச்செயலாளர் கோ.ஸ்தானுமாலயன் புத்தகம் வெளியிட்டார். அதனை தினமலர் ஆசிரியர் முனைவர். ராமசுப்பு பெற்றுக்கொண்டார். ராமன் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னால் ஆராய்ச்சியாளர் பி.என். ராமசந்திரன் உட்பட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# ஏ.பி. ஏ .வி.பி. பொதுக்குழு

அகில பாரத வழக்கறிஞர்கள் சங்கத்தின் தமிழக மாநில பொதுக்குழுக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ராஜேஷ் விவேகானந்தன் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் அமைப்பின் மாநிலத் தலைவராக பாஸ்கர், பொது செயலாளராக பழனிக்குமார் உட்பட இதர பொறுப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.



விஜயபாரதம்

# ஒரே இரவில் மாற்றம்

தமிழ்நாடு அரசின் TN 32 N 4251 என்ற எண் கொண்ட அரசுப் பேருந்தில் 13.08.2021 அன்று சாதாரண பேருந்தாக பயணித்தது. அதில் சேப்லா நந்தத்தில் இருந்து ஊ. மங்கலம் பயணிக்க ரூ. 7 கட்டணம் வசூலிக்கப்பட்டது. மறுநாள் 14.08.2021 அன்று, அதுவே விரைவுப் பேருந்தாக மாற்றப்பட்டு ரூ. 10 கட்டணமாக வசூலிக்கப்பட்டது என சமூக வலைத்தளங்களில் அந்த பேருந்து டிக்கெட்டின் புகைப்படத்துடன் செய்திகள் வெளியாகி உள்ளது. ஓ... இந்த 3 ரூபாய்தான் அந்த 3 ரூபாயா, இன்றிலிருந்து உன்னை விரைவுப் பேருந்தாக நியமிக்கிறேன் என தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் இந்த செயல் நெட்டிசன்களால் பரவலாக கிண்டலடிக்கப்பட்டு வருகிறது.

# வீரர்களுக்கு விருதுகள்



விஜயபாரதம்

பாரதத்தின் 75வது சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் உள்ள காவல்துறை, பாதுகாப்புப் பிரிவுகள் உள்ளிட்ட துறைகளை சேர்ந்தவர்களில் 1,380 பேர் இவ்வாண்டுக்கான வீர, தீர செயலுக்கான விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் இந்தோ திபெத் எல்லை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 23 பேர் இடம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு கிழக்கு லடாக்கில் சீன ராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட 20 பேர் இதில் அடங்குவர். இந்தோ திபெத்திய எல்லை காவல் படையில் இவ்வளவு அதிகமான வீரர்கள் பதக்கங்களை பெறுவது இதுவே முதல் முறை. மேலும், நக்சலைட் ஒழிப்பில் ஈடுபட்டுள்ள மத்திய ரிசர்வ் காவல் படையின் சிறப்புப் பிரிவான கோப்ரா கமாண்டோ படைப் பிரிவை சேர்ந்த மூன்று வீரர்கள், மேஜர் அருண் குமார் பாண்டே, மேஜர் ரவி குமார் சவுத்ரி, கேப்டன் விகாஸ் கத்ரி, ரைபிள்மேன் முகேஷ் குமார் உள்ளிட்டோருக்கு சௌரிய சக்ரா விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# கொடியேற்றிய பயங்கரவாதியின் தந்தை



விஜயபாரதம்

'ஆசாதி கா அமிர்த மஹோத்ஸவ்' நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச நிர்வாகம் சுதந்திர தினத்தன்று அனைத்து அலுவலகங்களிலும் தேசியக்கொடியை ஏற்ற கல்வித்துறை உட்பட அனைத்து துறைகளுக்கும் உத்தரவிட்டது. இதனையடுத்து அங்கு உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற அரசுத்துறை நிறுவனங்களில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. இந்த நிலையில், ஹிஸ்புல் முஜாஹிதீன் தளபதியும் முஸ்லிம் பயங்கரவாதியுமான புர்ஹான் வானியின் தந்தை முசாபர் வானி, தான் முதல்வராக உள்ள டிராலின் அரசு மேல்நிலைப் பள்ளியில், சுதந்திர தினத்தன்று தனது பள்ளியில் தேசியக் கொடியை ஏற்றினார். தேசிய கீதத்தையும் பாடினார். முன்னதாக, முசாபர் வானி தேசியக் கொடியை ஏற்ற மறுத்ததாகவும், இதனால் அவர் ராஜினாமா செய்ததாகவும் செய்திகள் வெளியாகின. அவர் அதனை வதந்தி என்று கூறி மறுத்தார். தான் ராஜினாமா செய்யவில்லை என்றும் தெளிவுபடுத்தினார். முன்னதாக, புர்ஹான் வானி கடந்த 2016ல் இந்திய பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டான். அவனது மரணத்தைத் தொடர்ந்து, அவனை நல்லவனாக, அப்பாவியாக சித்தரிக்க என்.டி.டி.வி, தி வயர் உட்பட பலர் முனைந்தனர். பத்திரிக்கையாளர் பர்கா தத் அவனை பயங்கரவாதி என கூறாமல் 'பள்ளி தலைமை ஆசிரியரின் மகன்' என்று குறிப்பிட்டார். முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா கண்ணீர் வடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# புலம் பெயர்ந்தோர் சொத்து மீட்பு



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீரில் 1990களில் நடைபெற்ற முஸ்லிம் பயங்கரவாதிகளின் வன்முறையால் அங்கிருந்து அகதிகளாக வெளியேறிய காஷ்மீர் பண்டிட்டுகளின் வீடு, நிலம் உள்ளிட்டவை முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. சட்டப்பிரிவு 370 நீக்கத்தைத் தொடர்ந்து அவர்களை மீள்குடியேற்றம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்குத் தேவையான சட்டத்திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. அந்த சட்டத்தை பயன்படுத்தி, காஷ்மீர பண்டிட்டுகளின் நிலங்களை மீட்க, முறைப்படுத்த, ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த ஜம்மு காஷ்மிர் துணைநிலை ஆளுனர் மனோஜ் சின்ஹா உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து ஆய்வு செய்து புலம்பெயர்ந்தோர் விட்டுச் சென்ற சொத்துக்களைக் கையகப்படுத்தவும் 15 நாட்களுக்குள் பதிவுகளைப் புதுப்பித்து, அறிக்கைகளை அந்தந்த கோட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற குழு பாராட்டிய யோகி

மூத்த காங்கிரஸ் தலைவர் ஆனந்த் சர்மா தலைமையிலான உள்துறை விவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த சிறப்பாக நடவடிக்கை எடுத்ததற்காக யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தர பிரதேச அரசைப் பாராட்டியுள்ளது. மற்ற மாநிலங்களும் உத்தரபிரதேச அரசின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது. பெண்கள் சார்ந்த பல்வேறு துறைகளை ஒன்றிணைத்து வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ 'ஒன் ஸ்டாப் சென்டர்' என்ற ஒற்றை சாளர அமைப்பை உருவாக்குதல் போன்ற முயற்சிகளை இக்குழு பாராட்டியது. இதுவரை, இந்த மையங்களின் மூலம் சுமார் 1,04,859 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதில், புகார் அளிப்பவர்களுக்கு காவல்துறை உதவி, மருத்துவ சிகிச்சை, சட்ட உதவி, உளவியல் ஆலோசனை, தற்காலிக தங்குமிடம் போன்ற அனைத்து சேவைகளும் வழங்கப்படுகின்றன.

விஜயபாரதம்



# பசு பாதுகாப்பு மசோதா நிறைவேறியது



அசாம் சட்டசபையில், காங்கிரஸ், ஏ.ஐ.யு.டி.எப் உள்ளிட்ட கட்சிகளின் விவாதங்கள், கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, கால்நடை பாதுகாப்பு மசோதா 2021 அசாம் சட்டசபையில் வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, 'பசுக்களைப் பாதுகாப்பது என்பது ஹிந்து மதம் உலகிற்கு அளித்துள்ள பரிசு. ஹிந்துக்கள் பசுக்களை பாதுகாக்கும்வரை ஹிந்து மதம் வாழும். ஒருவர் ஹிந்துவா இல்லையா என்பதை அவர் பசுவை எப்படி பாதுகாக்கிறார் என்பதை வைத்தே தீமானிக்கப்படும், அவர் நெற்றியில் வைத்துள்ள பெரிய திலகத்தினால் அல்ல. பசு பாதுகாப்பு இந்து மதத்தின் மைய சித்தாந்தம். பசு எனும் தாயை கொல்லவும் அதன் சதையை சாப்பிடவும் நாங்கள் அவளை நியமிக்கவில்லை. நாங்கள் பசுவினுடைய நண்பனாக, பாதுகாவலராக இருக்கவே நியமிக்கப்பட்டுள்ளோம். பசு பாரதத்தின் பாதுகாவலர். நமது நாடு விவசாய நாடு, நாங்கள் பசுக்களை நம்பியுள்ளோம்' என்ற காந்தியின் வரிகளை நினைவு கூர்ந்தார். மேலும், முகமதிய நண்பர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என நம்பிக்கை தெரிவித்தார். நீ ஹிந்துஸ்தான் மக்களின் இதயங்களை வெல்ல விரும்பினால் பசு வதையைத் தவிர்க்க வேண்டும் என பாபர் ஹுமாயுனிடம் தெரிவித்ததையும் நினைவு கூர்ந்தார்.

விஜயபாரதம்

# ராமகிருஷ்ண பரமஹம்சர்

## ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன ஒரு குட்டிக் கதை

ஒரு ஊரில் செல்வந்தன் இருந்தான். அவனுக்கு ஒரு தோட்டம் இருந்தது. அந்த தோட்டத்தில் ஒரு குளம் வெட்டி மீன்களை வளர்த்தான். ஒரு நாள் இரவு திருடன் ஒருவன் யாருக்கும் தெரியாமல் அந்த தோட்டத்தில் நுழைந்து மீன்களை பிடித்துக்கொண்டிருந்தான். இது செல்வந்தனுக்கு தெரியவர திருடனை பிடிப்பதற்கு ஆட்களை அனுப்பினான்.

காவலர்கள் வருவதை கண்ட திருடன், எந்த வகையிலும் தோட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாது, மாட்டிக்கொள்வது உறுதி என்று உணர்ந்தான். இனி தப்பிக்க வழி என்ன என்று யோசித்தான்! உடனே அருகில் கிடந்த சாம்பலை எடுத்து தன் உடல் முழுதும் பூசிக்கொண்டு ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டான்.காவலாளிகள் தோட்டம் முழுதும் தேடியும் அவர்களால் திருடனை பிடிக்க முடியவில்லை. ஆனால் ஒரு மரத்தடியில் உடல் முழுதும் சாம்பல் பூசியிருந்த சாதுவைத்தான் அவர்கள் கண்டனர் .

மறுநாள் காலையில் செல்வந்தனின் தோட்டத்தில் ஒரு ஞானி எழுந்தருளியிருக்கிறார் என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாக மலர்கள், காணிக்கை, பட்சணங்களுடன் அந்த தோட்டத்துக்கு சென்று வந்தனர். இதை கண்ட சாது வேடத்தில் இருந்த திருடன் மெய்சிலிர்த்துப் போனான்.

நானோ உண்மையில் ஒரு சாது அல்ல, சாதுவை போல் வேடம் தரித்த திருடன். அப்படி இருந்தும் மக்கள் என்னை உண்மையான சாது என்று நம்பி காணிக்கை வழங்குகின்றனர். என் மீது மதிப்பும் மரியாதையும் காட்டுகின்றனர். நான் உண்மையில் ஒரு சாதுவாக இருந்தால் இதைவிட மேலான சிறப்புகள் கிடைப்பதுடன் எனக்கு நிச்சயம் ஆண்டவனின் தரிசனமும், அருளும் கிட்டும் என்று தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

இப்படி அந்த திருடன் மேற்கொண்ட வெறும் வேடமே அவனது உள்ளத்தில் ஆன்மீக விழிப்பு உணர்வை உண்டாக்கியது. அன்று முதல் மனமாற்றம் பெற்று மேன்மை அடைந்தான்.

ஆசைகள் ஒருவன் மனதை விட்டு விலகும் போது ஆத்மாவிடம் தங்கியிருப்பது பிரம்மானந்தமே!

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள்




## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006



பாரதப் பிரதமர் நரேந்திர மோடி
தேசியக்கொடி ஏற்றினார்



தமிழக முதல்வர் ஸ்டாலின்
தேசியக்கொடி ஏற்றினார்



புதுவை முதல்வர் ரங்கசாமி
தேசியக்கொடி ஏற்றினார்



தில்லை நடராஜர் ஆலய
கோபுரத்தில் தேசியக்கொடி



பங்கோங் ஏரியில் சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்தோ திபெத் எல்லைப் படை வீரர்கள்



தேசப் பற்று என்பது உள்ளிருந்து வருவது

